இந்திய அரசு
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

# அரசமைப்பு (தொண்ணூற்று எட்டாம் திருத்தச்) சட்டம்,2012

# THE CONSTITUTION (NINETY –EIGHTH AMENDMENT)ACT,2012


தமிழாக்கம்:
இந்திய அரசுக்காக
சட்ட (ஆட்சி மொழிப் பிரிவு)த் துறை
தலைமைச்செயலகம்
சென்னை– 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை சிறப்பு ஆணையர்
மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2018

## அரசமைப்பு (தொண்ணூற்று எட்டாம் திருத்தச்) சட்டம், 2012

இந்திய அரசமைப்பினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், அரசமைப்பு (தொண்ணூற்று எட்டாம் திருத்தச்) சட்டம், 2012 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2. அரசமைப்பின் 371-ஐ உறுப்பிற்குப் பின்பு பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:-

" 371.ஒ.(1) குடியரசுத்தலைவர் கர்நாடக மாநிலம் பொறுத்து, செய்யப்பட்ட ஆணையின் வழி-

(அ) ஐதராபாத் - கர்நாடகம் மண்டலத்திற்காக தனித்ததொரு 2வளர்ச்சி வாரியத்தை நிறுவி அந்த வாரியத்தின் செயல்முறை பற்றிய அறிக்கையொன்று ஒவ்வோர் ஆண்டும் மாநில சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படும் என்ற வகையத்துடன் அதனை நிறுவுவதற்காகவும்;

(ஆ) மாநிலம் முழுவதின் தேவைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன மண்டலத்திற்கு வளர்ச்சி சார்ந்த செலவினத்திற்காக நேரிய முறையில் நிதியங்களை

பகிர்ந்தொதுக்கத்திற்காக; மற்றும்

(இ) மாநிலம் முழுவதின் தேவைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன மண்டலத்தைச் சார்ந்த மக்களுக்காக பொது வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி ஆகிய பொருட்பாடுகளில், நேரிய வாய்ப்புகளுக்காகவும் வசதிகளுக்காகவும், ஆளுநருக்குள்ள தனிப்பொறுப்பு எதற்காகவும் வகைசெய்யலாம்.

2.(1) ஆம் கூறின் (இ) உட்கூறின்படி பிறப்பிக்கப்படும் ஆணையொன்று :-

(அ) ஐதராபாத் - கர்நாடகம் மண்டலத்தில் உள்ள கல்விசார் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் பயிற்சி நிறுவனங்களிலுள்ள இடங்களில் ஒரு வீதத்தை பிறப்பால் அல்லது நிலைவாழ்விடத்தால் அந்த மண்டலத்தை சார்ந்த மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்வதற்காகவும்;மற்றும்

(ஆ) ஐதராபாத் - கர்நாடகம் மண்டலத்தில் மாநில அரசின் கீழும் மற்றும் மாநில அரசின் கட்டாளுகையின் கீழுள்ள குழுமம் அல்லது அமைவனம் எதிலுமுள்ள பணியடைகளை அல்லது பணியடைகளின் வகைகளைக் கண்டறிந்து அத்தகைய பணியடைகளின் ஒரு வீதத்தை பிறப்பால் அல்லது நிலைவாழ்விடத்தால் அந்த மண்டலத்தைச் சார்ந்த நபர்களுக்காக ஒதுக்கீடு செய்வதற்காகவும் மற்றும் ஆணையில் குறித்துரைக்கப்படலாகிறவாறு அதற்கு நேரடி ஆளெடுப்பு மூலமாகவோ அல்லது பதவி உயர்வு மூலமாகவோ அல்லது பிற முறை எதிலுமோ பணியமர்த்தம் செய்வதற்காகவும்”

வகை செய்யலாம்.